[திரு. எ.வ. வேலு] [2020 செப்டம்பர் 16

கடைகளுக்கெல்லாம் அதிக வரி கொடுக்க வேண்டும்; வாடகை தர வேண்டும்; சொத்து வரி கொடுக்க வேண்டுமென்று அரசு அலுவலர்கள் நிர்பந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிற கடைகளுக்கு வாடகையையும், அதேபோன்று நகராட்சிகளுக்கு சம்பந்தப்பட்டிருக்கிற கடைகளினுடைய வாடகையையும் இரத்து செய்து கொடுத்தால் அது வாழ்வாதாரத்தை இழந்திருக்கிற வாடகைதாரர்களுக்கு, அவர்கள் பிழைப்பு நடத்துவதற்கு வகையாக இருக்கும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2021 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 153 முதல் 171 வரையிலான 19 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் மூன்று முக்கிய நிதிக் குழுக்களில் ஒன்றான பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக இரண்டாவது முறையாக எனக்கு வாய்ப்பளித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையிலே குழுவின் தலைவராக நீங்கள் என்னை